[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1982 பிப்ரவரி 17

பங்கேற்ற அத்தனை உறுப்பினர்களும் அந்தக் கோவிலில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தங்கள் மூலமாக அரசுக்கு விண்ணப் பித்துக்கொண்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கேயுள்ள அறங்காவலர் குழு ராசினாமா செய்து விட்டார்கள் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் குற்ற வாளிகளைக் கண்டுபிடிக்க உதவ வேண்டும் என்றும் சொன்னார்கள், குற்றவாளிகளைக் கண்டுபிடித்தார்களா என்கிற விவரம் இப்போது தெரிவிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாராளுமன்றத்திலும் சட்டமன்றத் திலும் தொடர்ந்து பணியாற்றியவர். இப்படி திடீரென்று எழுந்து பொத்தாம் பொதுவில் ஒரு 'இம்பர்மேஷன்' கேட்பது முறையல்ல. முறைப்படி அதைக் கேட்டால், அரசாங்கத்திட மிருந்து பதில் பெற்றுத்தர முடியும். இந்த முறையை நான் அனுமதிக்கவில்லை.

திரு. வி கிருஷ்ணமூர்த்தி: சார், இன்பர்மேஷன் இருந் தால் சொல்லச் சொல்லுங்கள், அவர்கள் சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீரென்று எழுந்து இப்படிக் கேட்பது எல்லாம் முறை அல்ல.

(முற்பகல் 10-30)

(ஆ.) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நேற்றையதினம் தர்மபுரி மாவட்டத்தில் நடைபெற்ற அடக்குமுறை பற்றி கேட்டேன். இன்றைக்கு அந்தப் பிரச்னையை எடுத்துக் கொள் வதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு அதை எடுத்துக் கொள்வதாக நான் சொல்லவில்லை. இன்றைக்கும் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வருகிறது. கே. வி. குப்பத்தைப்பற்றியது; போலீஸ் அடக்குமுறை பற்றித்தான் வருகிறது. 20 பேர்கள் அதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

* * *

நீங்கள் இப்படிக் கோஷம் போடுவது முறையே அல்ல. அவை எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. என். சங்கரய்யா: தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்சனைப்பற்றிக் கேட்கிறார்கள்.....

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையிலே இப்படி நடந்து கொள்வது முறைதானா என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும். (குறுக்கீடு) திரு. உமாநாத் அவர்கள் கொடுத்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் இப்போது எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: நாங்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளாததால் அதை எதிர்த்து நாங்கள் வெளி நடப்புத்தான் செய்தாக வேண்டும். * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இந்த அவையினுடைய மதிப்பையும் மரியாதையையும் காப்பாற்றினால்தான் இந்த அவை நல்ல முறையிலே நடைபெறும். அதற்காக எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலே பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி தந்து அதன்பிறகு அதற்கு விளக்கங்கள் தருகின்ற முறையை நாம் கடைபிடித்துக்கொண்டு வருகிறோம். இன்றைக்கு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதாக இருக்கிறார்கள். அது ஏற்கெனவே கொடுக்கப்பட்ட ஒன்று. மாண்புமிகு உறுப்பினர்கள் நேற்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். உறுப்பினர்கள் அதுபற்றிய கருத்துக்களைச் சொன்னால் அதற்குரிய முறையிலே அரசு தரப்பிலேயே நிலைமையை எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கான விவரங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. நான் உறுதியாகச் சொல்கிறேன். நாளைக்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. விவரமான விளக்கங்களைத் தரவேண்டும் என்பதற்காக நாளை எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் உள்ளபடியே நீண்ட அனுபவம் பெற்றவர்கள், சட்டமன்றத்தின் தன்மையைப் பற்றி நன்கு அறிந்த அவர்கள் அவையின் தன்மையைக் காப்பாற்ற பெரும் ஒத்துழைப்பு தர வேண்டும். இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் அரசின் தரப்பிலே விளக்கங்கள் தரவேண்டும். நாளை எடுத்துக்கொண்டால் மாண்புமிகு உறுப்பினர்களும் அதிலே கருத்துக்களைச் சொல்லலாம். அரசின் தரப்பிலேயும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைச்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சொல்ல முடியும். ஆகவே, இந்த அவையின் கண்ணியத்தையும் மதிப்பையும் காப்பாற்றுவதற்கு அவையில் இருக்கின்ற எல்லா தரப்பு உறுப்பினர்களும் ஒத்துழைப்பு தந்தால் தான் நம்முடைய கண்ணியமும் காப்பாற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாணவப் பருவத்திலிருந்து அரசியல் நிலைமைகளை நான் பார்த்து வருகிறேன். ஒவ்வொருவரும் ஒரு அரசியல் கட்சிக்குச் சொந்தக்காரராகத்தான் இருக்கிறோம். ஆகவே வெளிநடப்பு செய்கின்ற உரிமையைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அது மாண்புமிகு உறுப்பினர்களின் ஜனநாயகக் கடமைகளில் ஒன்று. அந்த உரிமை அவர்களுக்கு உண்டு. ஆனால் முழக்கங்கள், கோஷங்கள் போன்றவற்றை எல்லாம் அவைக்கு வெளியே வைத்துக்கொள்ளலாமே தவிர அவையிலே கூடாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தாங்கள் மிகுந்த அனுபவத்தின் அடிப்படையிலே அறிவுரைகளை எல்லாம் சொன்னீர்கள். ஆனால் இருக்கின்ற உறுப்பினர்கள் உங்களிடத்திலே 'அலவ்' பண்ணவேண்டும் என்று பணிவாகக் கேட்டபோது அனுமதி தராமல் தாங்களே வெளியே தள்ளவேண்டும் என்று நினைக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உள்ளே வாருங்கள் என அழைப்பதுதான் என் வழக்கமே தவிர யாரையும் வெளியே தள்ள நான் நினைத்ததே இல்லை.

(முற்பகல் 10-40)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றாலும், 3 நாட்களாக சட்டசபையில் அது குறித்து விவாதித்தோம். அது சம்பந்தமாக கொலைகாரர்கள் கைது செய்யப்பட்டார்களா என்பதைத்தான் நான் ஒரு விளக்கம் பெறுவதற்காக ஒரு சப்மிஷனில் கேட்டேன். எங்களைப் பேசவிடாமல் செய்து கொண்டிருந்தால் வெளியே அனுப்புவது போலத்தானே ஆகிறது.......(மணியடிக்கப்பெற்றது)

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளிநடப்பு செய்வது எல்லாம் உங்களுடைய உரிமை. அது ஜனநாயக மரபுக்கு உட்பட்டது. ஆனால் இது போன்ற நிலையை, அவைக்குள்ளேயே கோஷம் எழுப்பும் முறையை நான் இதுவரையில் கண்டதே இல்லை. யாராக இருந்தாலும் இதற்கு அனுமதிக்க மாட்டார்கள். காலையில் பேப்பரைப் பார்த்துவிட்டு, அது குறித்து அரசாங்கம் விளக்கம் வேண்டும் என்று திடீர் திடீர் என்று ஏதாவது பிரச்சினையை அவையில் கிளப்பினால் எப்படி அவை ஒழுங்காக நடக்க முடியும்? எதுவாக இருந்தாலும் ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் அல்லது வினாக்களின் வாயிலாக எழுப்பிக் கேளுங்கள். ஏதாவது ஒரு விதிமுறைகளுக்கு உட்பட்டு கேட்டால், பதில் சொல்வதற்கு அரசாங்கத்திற்கும் இயலும், அவையின் கண்ணியமும் காப்பாற்றப்படும். ஆனால் இதுபோன்ற முறைகள் சரியல்ல. (குறுக்கீடுகள்-குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் விதிமுறைகளின்படி, நடைமுறைகளுக்கு உட்பட்டு எழுப்ப நினைக்கும் பிரச்னைகளை எழுப்ப வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. (குறுக்கீடு) சப்மிஷன்தான் என்று சொன்னால், இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு சப்மிஷனைக் கேட்கலாம். குறுகிய கால வினாக்களைக் கேட்டுப் பதிலை பெறுவதற்குக்கூட உறுப்பினர்களுக்கு வழி இருக்கிறது. ஆகவே விதிமுறைகளின்படி எழுப்புங்கள் என்று கேட்கிறாரே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

ஜல்லிக்கட்டு விழாவின்போது போலீஸ் துப்பாக்கிச் சூடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குடியாத்தம் அருகே கே.வி. குப்பம் என்னும் கிராமத்தில் 13-2-1982 அன்று மாடு விடும் திருவிழா (ஜல்லிக்கட்டு)போது போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக மக்கள் பலர் படுகாயம் அடைந்துள்ளதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதட்டமும் பீதியும் குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதியைக் கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு உ. சுப்பிரமணியன் அவர்கள் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள்—

திரு. த. வேணுகோபால்

திரு. கே. ஆர். சுந்தரம்

திரு. டி. மணி